**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 54/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 5 |
| Name | : | விஜயகாந்த் |
| Father's Name/Husband Name: | | பூமாலை |
| Village | : | கைப்பெரம்பலூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 43 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர் இல்லை, அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கைப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய சின்ன மாமியார். அவரை எதிரி அடித்துவிட்டதாக கேள்விபட்டேன். அந்த வழக்கு சம்மந்தமாக 08.07.2024ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நானும், எனது ஊரை சேர்ந்த ராஜாங்கம் என்பவரும் சண்டை நடந்த இடத்தில் இருந்து போது அங்கு வந்த போலிசார் சண்டை நடந்த இடத்தை படம் வரைந்து எழுதி எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அ.சா.1ன் சின்ன மருமகன் ஆவேன். புகார்தாரர் எனது மாமியாரின் தங்கை ஆவார். சம்பவம் நடந்த தேதியில் தான் நான் சம்பவத்தை கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவத்தை கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்ற பிறகு என் மாமியார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. யார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 2 போலிசார் விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்தில் பணிபுரிபவர்களில் காவலர் வேறு , உதவி ஆய்வாளர் வேறு, ஆய்வாளர் வேறு என்றால் அந்த விவரங்கள் எனக்கு தெரியாது, போலிசார் உடை அணிந்து வந்தார்கள். புகார்தாரர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்லும்போது நான் அவருடன் சென்றேனா என்றால் இல்லை. வழக்கறிஞரை பார்க்க பெரம்பலூருக்கு புகார்தாரரை நான் அழைத்து வந்தேன். அதன் பிறகு எங்கு சென்று புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் போலிசார் வந்து என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.